සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
**Year End Evaluation**

| | | | |
|---|---|---|---|
| ශ්‍රේණිය / தரம் / Grade: 11 | විෂයය / பாடம் / Subject: **சைவநெறி** | පත්‍රය / வினாத்தாள் / Paper: I,ii | කාලය / காலம் / Time: மணி3 |

**கவனிக்க :**

- **எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் (1) (2) (3) (4) என நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் அதற்குரிய இலக்கத்தின் மீது புள்ளடி இடுக.**

1. "களிற்று மாமுக பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம் " என்பதில் குறிப்பிடப்படும் இறைவன்
   1. முருகன் 2. சிவபெருமான் 3. விநாயகர் 4. சக்தி

2. வேதாந்தம் என சுட்டப்படுவது
   1. தேவாரம் 2. மந்திரம் 3. சித்தாந்தம் 4. உபநிடதம்

3. ஆண்டுதோறும் இறந்தவரின் நினைவாக செய்யப்படும் கிரியை
   1. சிரார்த்தம் 2. அந்தியேட்டி 3. மாசிகம் 4. அஸ்தி சஞ்சயனம்

4. பின்வருவனவற்றில் அழிவற்ற பொருளாவது
   1. சரீரம் 2. ஆன்மா 3. போகம் 4. செல்வம்

5. முறைப்படி சந்தியாவந்தனம் செய்யும் தகுதி உடையவர்
   1. வறியோர் 2. வசதி படைத்தோர்
   3. தீட்சை பெற்றோர் 4. சித்தி பெற்றோர்

6. "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று பாடியவர்
   1. ஔவையார் 2. கம்பர் 3. திருவள்ளுவர் 4. புத்தர்

7. எம்மால் இயன்றதை இல்லை என்னாது கொடுத்தல் என்பதை வலியுறுத்தும் வாக்கியம்

1. அறம்செய்ய விரும்பு 2. ஏற்பது இகழ்ச்சி 3. இயல்வது கரவேல் 4. ஐயமிட்டுண்

8. ஆசாரம் என்பதன் பொருள்

1. ஈகை 2. நேர்மை 3. வாய்மை 4. ஒழுக்கம்

9.“வையத்தில் அன்பில் சிறந்த தவமில்லை'' என்று உரைத்தவர்

1. திருமூலர் 2 .பாரதியார் 3. சேக்கிழார் 4. தாயுமானவர்

10. விசேட தீட்சை பெற்றோர் பூசிக்கும் இலிங்க வகையாவது

1. ஆத்மார்த்த லிங்கம் 2. பரார்த்த லிங்கம்
3. மரகத லிங்கம் 4. சணிக லிங்கம்

11. மேட ராசிக்குரிய நட்சத்திர தொகுதி

1. பூசம், புனர்பூசம் , ஆயிலியம் 2. மகம் , பூரம் ,உத்தரம்
3. அஸ்வினி, பரணி, கார்த்திகை 4. விசாகம் , அனுஷம் , கேட்டை

12. நாம் ஆன்ம ஈடேற்றம் கருதி அனுஷ்டிக்கும் விசேட நாள்

1. பிறந்தநாள் 2. திதி 3. பண்டிகை 4. விரதம்

13. ஐப்பசி மாத அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் ஆறு நாட்கள் அனுஷ்டிக்கும் விரதம்

1. விநாயகர் சஷ்டி 2. கந்த சஷ்டி 3. திருவெம்பாவை 4. திருக்கார்த்திகை

14. திருக்கார்த்திகையின் போது வீடுகளில் தீபங்கள் ஏற்றப்படும் நாளாக விளங்குவது

1. குமாராலய தீபம் 2. மோட்ச தீபம் 3. நெய்தீபம் 4. சர்வாலய தீபம்

15. பஞ்சபூத தலங்களில் திருவண்ணாமலையை குறிப்பது

1. வாயு தலம் 2. ஜல தலம் 3. அக்கினி தலம் 4. ஆகாய தலம்

16. உருத்திராட்சம் அணியும் அடியார்களுக்கு கிடைக்கும் நற்பலன்களாவன

1. பொன் ,பொருள் 2. பெயர் , புகழ்
3. கல்வி ,பதவி 4. ஆரோக்கியம் , செல்வம்

17. புராணங்களில் இடம் பெறும் போர்களில் உலாவுவோர்.

1. மனிதர் - தேவர் 2. தேவர்- அசுரர் 3. அசுரர் - மனிதர் 4. முனிவர் - தேவர்

18. தாலி கட்டிய பின் மணமக்கள் விளங்கும் சொரூபம்

1. அன்னை - பிதா 2. சிவன் - சக்தி 3. பதி- பசு 4. நீர் - நிலம்

19. முருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றாக அமைவது

1. கந்தகோட்டம் 2. குமரகோட்டம் 3. சுவாமிமலை 4. வடபழனி

20. திருமாலின் மார்பில் உறையும் தெய்வம்

1. இலக்குமி 2. சரஸ்வதி 3. துர்க்கை 4. காமாட்சி

21. சமய தத்துவக் கருத்துக்களை கதை வடிவில் கூறும் நூல்கள்

1. இதிகாசங்கள் 2. வேதங்கள் 3. ஆகமங்கள் 4. புராணங்கள்

22. திலகவதியாரின் இறப்பைத் தடுத்தவர்

1. சிவபெருமான் 2. மருணீக்கியார் 3. கலிப்பகையார் 4. புகழனார்

23. தூபம் இடும் பணியுடன் கலயனார் செய்த மற்றொரு திருப்பணி

1. தோத்திரம் பாடல் 2. நந்தவனம் அமைத்தல்

3. அடியாருக்கு அன்னமிடல் 4. கோயிலில் விளக்கேற்றல்

24. சுவேதனப் பெருமாளுக்கு மெய்கண்டார் என்னும் தீட்சா நாமத்தை வழங்கியவர் யார்

1. பரஞ்சோதி முனிவர் 2. அகத்திய முனிவர் 3. விசுவாமித்திரர் 4. திருநந்திதேவர்

25. ஒன்பது தந்திரங்களான நூல்

1. திருவாசகம் 2. திருப்புகழ் 3. திருப்பாவை 4. திருமந்திரம்

26. பிரதிஷ்டா கிரியைகள் நிகழ்த்தும் ஆசாரியாரிடம் இருக்க வேண்டிய பண்புகள்

1. பிரம்மச்சரியம் ,உலக வசியம் ,மன சாந்தி 2. பக்தி, அறிவு, ஒழுக்கம் , மன உறுதி

3 .காரியசித்தி, பரிவு, கடமை 4. சுத்தம் , உருவ வழிபாடு, தத்துவ அறிவு

27. சுவாமி விபுலானந்தர் தம்மை இராமகிருஷ்ண மடத்தில் இணைத்துக்கொண்ட ஆண்டு

1. 1915 2. 1908 3. 1922 4. 1917

28. மாணிக்கவாசகர் முக்தி அடைந்த தலம்

1. திருவரங்கம் 2. தில்லை 3. திருவாரூர் 4. திருவாமூர்

29. சைவ சித்தாந்தம் கூறும் சத்துப் பொருட்கள்

1. ஆணவம் , கன்மம் , மாயை 2. மனம் , வாக்கு, காயம்

3. பதி, பசு, பாசம் 4. தனு, கரணம் , போகம்

30. மறை ஞானசம்பந்தர் பிறந்த ஊர்

1. திருவெண்ணை நல்லூர் 2. திருவிடை மருதூர்

.3. கொற்றவன்குடி 4. திருப்பெண்ணாகடம்

31. முள்ளிச் செடிக்கு முத்தி கொடுத்தவர்

1. உமாபதி சிவாச்சாரியார் 2. மறைஞான சம்பந்தர்

3. நமச்சிவாய தேசிகர் 4. மெய்கண்டார்

32. அருணகிரிநாதரின் மெய்ஞான அனுபூதியை விளக்கவல்ல தொகுப்பாக அமைவது

1. கந்தரலங்காரம் 2. வேல் விருத்தம் 3. கந்தரனுபூதி 4. மயில் விருத்தம்

33. மூல மலத்தினை மட்டும் உடைய ஆன்மாக்கள்

1. சகலர் 2. விஞ்ஞானகலர் 3. பெத்தர் 4. முத்தர்

34. ஆறுமுக நாவலர் நிறுவிய பாடசாலை

1. தொழிற்பயிற்சி கூடம் 2. காவிய பாடசாலை

3. சைவாசிரிய கலாசாலை 4. சைவபிரகாச வித்தியாசாலை

35. நாம் பல பிறவிகளிலும் செய்த வினைகளின் தொகுதி

1. ஆகாமியம் 2. சஞ்சிதம் 3. கன்மம் 4. பிராரத்தம்

36. சடங்குகளின் தொகுப்பாக அமையும் வழிபாடு

1. ஆகம வழிபாடு 2. இயற்கை வழிபாடு 3. நாட்டார் வழிபாடு 4. சக்தி வழிபாடு

37. அறச்செயல்கள் யாவற்றுக்கும் மூலமாக விளங்குவது

1. நல்லெண்ணம் 2. தனம், தானியம் 3. பொருளாதாரம் 4. தெய்வ சிந்தனை

**38-40 வரையிலான வினாக்களை இந்த அட்டவணை துணையுடன் செய்க.**

| சந்தான குரவர் | வாழ்வியல் சம்பவம் | நூல்கள் |
|---|---|---|
| A. மெய்கண்டார் | D. புரட்டாதி பூரம் குருபூசை தினம் | G. சிவஞான போதம் |
| B. உமாபதி சிவாச்சாரியார் | E. மறைஞான சம்பந்தரின் சீடர் | H. இருபா இருப∴து |
| C. அருணந்தி சிவாச்சாரியார் | F. நாற்பத்தொன்பது சீடர்களுக்கு கற்பித்தவர் | I. கோயிற்புராணம் |

38. புறச் சந்தான குரவர்களில் முதலாவருடன் தொடர்புடைய தொகுதி

1. ADG 2. AEG 3. AFG 4. BDG

39. சித்தாந்த அட்டகம் எழுதியவர் உடன் தொடர்புடைய தொகுதி

1. BEI 2. BFH 3. BDG 4. CDG

40. சகலாகம பண்டிதருடன் தொடர்புடைய தொகுதி

1. CEG 2. BDG 3. BFI 4. CDH

## பகுதி 2

**முதலாம் ,இரண்டாம் வினாக்கள் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகளும் வழங்கப்படும்.**

**01. சுருக்கமாக விடை எழுதுக.**

1 .திரி கரணங்கள் யாவை?

2. புற ஆசாரங்கள் இரண்டினை எழுதுக

3. வரலட்சுமி விரதம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?

4. சைவ சமய விழுமியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

5. வீட்டுக்கிருத்தியம் என்றால் என்ன?

6. வேதத்தில் ஆரண்யங்கள் குறிப்பிடும் விடயம் யாது?

7. மகோற்சவத்தின் போது நிகழும் திருக்கல்யாணம் உணர்த்தும் தத்துவம் யாது?

8. திருஞானசம்பந்தர் "மட்டிட்ட புன்னை" என்ற பதிகம் பாடி நிகழ்த்திய அற்புதம் யாது?

9. மெய்கண்ட தேவரின் பெற்றார் யாவர்?

10. "மட்டக்களப்பு மான்மியம் " என்னும் நூலில் சிறப்பிக்கப்படும் ஆலயம் யாது?

**02.** மேல்வரும் பாடல்களில் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

அ. "உற்றுமை சேர்வது....."

ஆ. "நாம் ஆர்க்கும் குடியல்லோம்...."

இ. "உம்பர்தருத் தேனுமணிக்....."

ஈ. "பச்சைமா மலைபோல்......"

உ. "தனம் தரும் கல்வி தரும்....."

**03.**"மண் சுமந்து கூலி கொண்டு அக்கோவால் மொத்துண்டு புண் சுமந்த பொன் மேனி பாடுதுங் காண் அம்மானை" (- திருவாசகம்)

1. மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் தவிர்ந்த ஏனைய இரு பதிகங்களை பெயரிடுக.
2. மேலே காணப்படும் பாடல் வரிகள் உணர்த்தும் அற்புதம் யாது?
3. அவர் முக்தி அடைந்த வரலாற்றை சுருக்கி எழுதுக

**04.** “எமது சமய வாழ்வை வளப்படுத்துபவை ஆலயங்களாகும்.”

1. சிவ மூர்த்தங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. மகோற்சவத்தின் போது ஊர் மக்கள் ஆற்றும் திருப்பணிகள் மூன்றினை எழுதுக.
3. கும்பாபிசேகத்தின் நான்கு வகைகளும் யாவை? அவற்றில் இரண்டினை விளக்குக.

**05.** “மீதுபடு திண் தோள் விடலை அறம் திறம்பும்
கோதுபடு தீயோர் குழீஇய நகருள் புக்கு
தாதுபடு தண்தார் சயந்தன் அமரருடன்
தீது படி வெய்ய சிறைக் காத்து சென்றனனே”

(கந்தபுராணம்)

1. மீட்சிப் படலம் இடம்பெறும் நூல் யாது? அதனை எழுதியவர் யார்?
2. இந்நூலில் இடம்பெறும் காண்டங்கள் யாவை?
3. மேலுள்ள பாடலில் விளக்கப்படும் சம்பவத்தினை எழுதுக.

**06.** “இலங்கையில் சைவத்தின் தொன்மையானது இதிகாச காலத்துக்கும் முற்பட்டது என அறியக் கிடைக்கினறது”

1. இலங்கையில் காணப்படும் தேவாரப் பாடல் இடம் பெற்ற சிவாலயங்கள் யாவை?
2. இங்கே முருக வழிபாட்டின் பழமையை எடுத்துக்காட்டும் சான்றுகள் மூன்றினை குறிப்பிடுக.
3. பொலன்நறுவை கால சைவத்தின் சிறப்புகள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை விளக்கி எழுதுக.

**07.** மேல்வரும் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.

1. திலகவதியார்
2. அன்னதானம்
3. சரியை நெறி
4. வேதங்கள்

සියලු ම හිමිකම් ඇවිරිණි
முழுப் பதிப்புரிமையுடையது.
All Rights Reserved

බස්නාහිර පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
மேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
**Department of Education - Western Province**

වර්ෂ අවසාන ඇගයීම
ஆண்டிறுதி மதிப்பீடு - 2020
**Year End Evaluation**

පිළිතුරු පත්‍රය
**Marking Scheme**

ශ්‍රේණිය / தரம் / Grade: 11
විෂයය / பாடம் / Subject: சைவநெறி

விடைத்தாள்

1. 3
2. 4
3. 1
4. 2
5. 3
6. 1
7. 3
8. 4
9. 2
10. 1
11. 3
12. 4
13. 2
14. 4
15. 3
16. 4
17. 2
18. 2
19. 3
21. 4
22. 2
23. 3
24. 1
25. 4
26. 2
27. 3
28. 2
29. 3
30. 4
31. 1
32. 3
33. 2
34. 4
35. 2
36. 3
37. 1
38. 3
39. 1

20. 1

40. 4

(1x40=40)

## பகுதி 2

## விடைத்தாள்

**01.**

1. மனம், வாக்கு, காயம்
2. உடலை தூய்மையாக வைத்திருத்தல் சுத்தமான உணவை உண்ணுதல்
3. .ஆவணி மாதத்தில் பௌர்ணமிக்கு முந்திய வெள்ளிக்கிழமை அனுட்டிக்கப்படும்
4. ஈகை, ஒப்புரவு, அன்புடைமை , வாய்மை
5. இறந்தவரின் வீட்டில் அந்தியேட்டியின்மறுநாள் செய்யப்படும் கிரியை வீட்டுக் கிருத்தியம் எனப்படும்
6. சடங்குகள் பற்றிய தத்துவ விளக்கங்களை உருவகக் கதைகளை எடுத்துரைக்கும்
7. அருள் வடிவான சக்தியும் அறிவு மயமான சிவமும் இணைந்து இப்பிரபஞ்சத்தை இயக்கும் தத்துவத்தை விளக்குகிறது
8. சிவநேசரின் மகளான பூம்பாவையின் அஸ்தியிலிருந்து அவளை உயிர்ப்பித்தார்
9. தந்தையார்- அச்சுத களப்பாளர்

   தாயார்- மங்களாம்பிகை
10. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

2×10=20 புள்ளிகள்

**02.** எழுத்துப்பிழைகளை அவதானித்து புள்ளி விளங்குக

- 1 - 6 எழுத்து பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப் படமாட்டாது
- 7 - 9 எழுத்து பிழைகளுக்கு 01 புள்ளி குறைக்கப்படும்.
- 10- 12 எழுத்து பிழைகளுக்கு 03 புள்ளி குறைக்கப்படும்.
- வரி கிரமம் பிழையாயின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது

01. பாடல் 3×2= 6 புள்ளிகள்

பொழிப்புரை 2×2= 4 புள்ளிகள்

மொத்தம். 10 புள்ளிகள்

**03.** 1. சிவபுராணம் , அம்மானை, திருவுந்தியார் , திருவெம்பாவை

(2 புள்ளிகள்)

2. வைகை ஆறு பெருக்கெடுத்து ஓடும் போது பொன்மனச் செல்விக்காக கூலியாளாக வந்த சிவபெருமான் புட்டினை கூலியாகப் பெற்று அணை கட்டினார் அணை கட்டும் வேலையை அரசன் பார்க்க வந்தபோது கூலியாளாக வந்த சிவபெருமான் அணை கட்டும் வேலையை செய்யாமல் உறங்குவதை கண்டு சினந்து அவரை பிரம்பால் அடித்தான் உடனே கூலியாள் மறைய பிரம்படி அங்கிருந்த அனைவர் மீதும் விழுந்தது

(3 புள்ளிகள்)

3. தில்லை பெருமானுக்கு பூசை செய்வதற்காக காலையில் கோயிலுக்கு வந்த அந்தணர்கள் கோயில் படிக்கட்டில் திருவாசகமும் திருக்கோவையாரும் எழுதப்பட்டு "திருவாதவூரார் விளம்பிட அம்பலவன் எழுதியது "என்று எழுதப்பட்டு அழகிய சிற்றம்பலமுடையான் என ஒப்பமிடப்பட்டப்பட்டிருந்தது. தில்லை வாழ் அந்தணர்கள் மாணிக்கவாசகரிடம் சென்று நீர் பாடிய பாடல்களுக்கு பொருள் யாது ? என வினவினார் பொருளை காட்டுகிறேன் வாருங்கள் என்று கூறி தில்லை வாழ் அந்தணர்கள் 3000 பேருடன் கோயிலுக்குள் சென்று இவரே பொருளாவார் என்று அம்பலத்தரசனை காட்டி கோயில் கருவறையில் சென்று இறைவனுடன் இரண்டறக் கலந்தார் மாணிக்கவாசகர்

(5 புள்ளிகள்)

**05**. 1. கந்தபுராணம் கச்சியப்ப சிவாச்சாரியார்

(2 புள்ளிகள்)

2. சம்பவ காண்டம் (உற்பத்தி காண்டம்) அசுர காண்டம் மகேந்திர காண்டம் யுத்த காண்டம் தேவ காண்டம் தட்ச காண்டம்

(3 புள்ளிகள்)

3. முருகப்பெருமானின் கட்டளையை ஏற்று வீரபாகு தேவர் சூரனின் நகரமாகிய மகேந்திரபுரி சென்று சயந்தன் முதலான தேவர்கள் சிறை வைக்கப்பட்டிருந்த சிறைச்சாலை அடைந்தார் அங்கே வீரவாகு தேவரின் ஆற்றலை கண்டு தேவர்கள் வியந்தனர்.அவரை கைகூப்பி வணங்கினர் எங்கள் துயர் தீர்க்க வந்தீர்களா என கேட்டனர் வீரவாகுதேவர் போரில் முருகப்பெருமான் சூசபத்மனை வென்ற செய்தியை கூறினார் அதனைக் கேட்ட தேவர்கள் மகிழ்ந்து வீரவாகுதேவர் உடன் புறப்பட்டனர்

(05 புள்ளிகள்)

**06.** 1. திருக்கேதீச்சரம் திருக்கோணேச்சரம்

(2 புள்ளிகள்)

ii. 1. இரும்பிலான வேல் வடிவங்கள் கந்தரோடை பூநகரி என்னும் இடங்களில் கிடைத்தமை.
2. நகுலேச்சரத்தில் கிடைக்கப்பெற்ற கல்லாலான மயில் வடிவம்

3. திருக்கோயிலில் கிடைக்கப்பெற்ற நாகர் கால கல்வெட்டுகள்
4. கிழக்கில் பல முருகன் கோயில்கள் அமைந்தமை
5. வடக்கில் புகழ்பெற்ற முருகன் ஆலயங்கள் இருந்தமை

(3 புள்ளிகள்)

iii. 1. இக்காலப்பகுதியில் இலங்கையில் சைவ சமயம் வளர்ச்சி பெற்றது
2. கருங்கல்லினால் சிவாலயங்கள் புதிதாக கட்டப்பட்டமை
3. புராதன சிவாலயங்களை சீரமைத்தமை
4. விஜயபாகு மகா பராக்கிரமபாகு போன்றோர் பௌத்த மன்னர்களாக இருந்த போதும் சிவாலயங்களை கட்டியமை
5. கலைநயம் மிக்க செப்புப் படிமங்கள் கிடைக்கப்பெற்றமை

சிவாலயங்கள் புதிதாக கட்டப்பட்டமை சோழர்கள் கருங்கல்லினால் கலையம்சம் பொருந்திய பத்துக்கும் மேற்பட்ட சிவாலயங்களை பொலநறுவையில் கட்டினர் அத்துடன் பதவியாவில் இரவி குலமாணிக்க ஈச்சரம் அனுராதபுரத்தில் உத்தம சோழச்சரம் எனும் ஆலயங்களும் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன

(5 புள்ளிகள் )

**07**. தலைப்பினை விளக்கி ஒரு பகுதியாக முக்கிய விடயங்கள் ஐந்தில் இருப்பின்

( 2× 5= 10 புள்ளிகள் )